செ. கு. எண்:187

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை – 18.7.2013</u>

திருவண்ணாமலை மாவட்டம், சந்தவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. அசோகன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.7.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ராஜேந்திரன் அவர்கள் 2.7.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், “Q” பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. S.பெரியசாமி அவர்கள் 2.7.2013 அன்று கொட்டாரம் கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. R.ரமேஷ் அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 2.7.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், செம்பியம் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.C.சீனிவாசன் அவர்கள் 5.7.2013 அன்று துறைமுக கடல் பகுதியில் படகிலிருந்து தவறி கீழே விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்ட ஆயுதப் படை பிரிவில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.கருப்பசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 8.7.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்த காவல் துறை உதவி ஆய்வாளர் ராஜேந்திரன்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் அசோகன், பெரியசாமி, சீனிவாசன்; தலைமைக் காவலர் ரமேஷ்; மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் கருப்பசாமி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான உதவி ஆய்வாளர் ராஜேந்திரன்; உடல் நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் அசோகன்; தலைமைக் காவலர் ரமேஷ் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் கருப்பசாமி; சாலை விபத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் பெரியசாமி; படகு விபத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சீனிவாசன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9